AEIJMR – Vol 7 – Issue 05 – May 2019 ISSN - 2348 – 6724

# இயேசு காவியத்தில் பழமொழிகள்

முனைவர் **ஜெ.லொயோலா பீரீஸ்,**

துறைத்தலைவர், தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

சமூகத்தில் மக்களிடையே காலங்காலமாகப் பழகிவரும் மொழிகள் பழமொழிகள். இவை பழமையானவை. பட்டறிவின் அடிப்படையில் உருவானவை. பல சொற்களில் கூறினாலும் புரிய வைக்கமுடியாத உண்மைகளை பழமொழிகள் நறுக்குத் தெறித்தாற் போலச் சில சொற்களில் கூறுகின்றன. கேட்பவர் உள்ளத்தில் அவை சொல்லும் பொருளாலும், முறையாலும் எளிதாகப் பதிந்து விடுகின்றன. இயேசு காவியத்தில் கண்ணதாசன் பயன்படுத்திய பழமொழிகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**இயேசுகாவியம் :**

தமிழ்க் கிறித்துவ இலக்கியங்கள் பலவும் கிறித்துவின் வரலாற்றைக் கிறித்துவ வேதாகமத்தின் அடிப்படையில் பாடியுள்ளன. அவற்றுள் சிலவாகத் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், திருவவதாரம், சுடர்மண வாழ்வளிக்கும் வள்ளல் முதலானவற்றைக் குறிக்கலாம்.

திருச்சி மறைமாவட்ட கிறத்தவ சமயக் கலைத்தொடர்பு நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு.எஸ்.எம்.ஜார்ஜ், ஜே.பி.ஸ்தனிஸ்லாஸ், சந்திர மோகன் ஆகிய மூவரின் வேண்டுதலை ஏற்றக் கவிராயர் கண்ணதாசன், இயேசுவின் வரலாற்றையே காவியமாகத் வடித்தெடுத்து ‘இயேசு காவியம்’என்ற தலைப்பில் தந்துள்ளார். 1980 இல் தொடங்கிய இம்முயற்சி 1981 இல் தான் முற்றுப்பெற்றுள்ளது.

இயேசு காவியம் 5 தலைப்புக்களில் அமைந்துள்ளது. 1.கிறித்துவின் பிறப்பு 2.இயேசு தம்மை தொண்டிற்கு ஆயத்தம் செய்து கொள்ளல் 3. சமூகத்தில் இயேசுவின் போதனைகள், சாதனைகள் 4. சிலுவைப்பாடு 5.உயிர்த்தெழுதல் என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்காப்பியம் பற்றிப் படைப்பாளரின் முடிவாக அவரே சொல்லியுள்ள குறிப்பொன்று ‘சமயங்களில் ,பலர் என்னை இறவாக்காவியம் ஒன்று எழுதுங்கள் என்று வற்புறுத்தியதுண்டு. அந்த இறவாக் காவியம், இயேசு காவியம் தான் என்று நான் உறுதியாகக் கூறமுடியும்.

**கண்ணதாசன் :**

1927 இல் இராமநாதபுரம் சிறுகூடல்பட்டியில் சாத்தப்பருக்கும் விசாலாட்சிக்கும் மகனாகப் பிறந்த முத்தையா, கவிதை உலகில் ‘கண்ணதாசன்’ என்ற புனைப்பெயருடன் சிறந்து விளங்கினார். மரபுக் கவிதைகள் திரைஇசைப்பாடல்கள், சிறுகதை, புதினம் என வளர்ந்தவர். புத்திரிக்கை துறையிலும் தானே இதழ் ஆசிரியராகவும் பணியாற்றி 20ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத் துறைகளில் தன் முத்திரையைப் பதித்தவர். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தோற்ப்பாவை, கவிதாஞ்சலி, இயேசுகாவியம் ஆகிய சிறு காப்பியங்களை எழுதியுள்ளார்.

**பழமொழி :**

பழமொழி என்றால் என்ன? என்ற வினாவுக்குத் தொல்காப்பியர் வரையறை செய்து விடையளித்துள்ளார்

***‘நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்***
***எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி***
***குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்***
***ஏது நுதலிய முதுமொழி என்ப’*** *(தொல் செய்யுளியல் - 1433)*

என்று முன்னையோர் குறிப்பிடுவதாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார். இதனில் இருந்து பழமொழியின் பழமையை உணரலாம்.

இந்நூற்பாவுக்கு ‘நுண்மை விளங்கவும் , சுருக்கவும் விளங்கவும், ஒளியுடைமை விளங்கவும், மென்மை விளங்கவும், இன்னோரன்ன விளங்கித் தோன்றிக் கருதிய பொருளை காரணத்தோடு முடித்துக் கூறுதல் முதுமொழி’ என்று ச.வே.சுப்பிரமணியன் கூறுகிறார்.

தொல்காப்பியரின் நூற்பாவில் நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம், ஏது, நுதலிய, முதுமொழி என்ற சொற்களும் தொடர்களும் கவனத்திற்குரியவை. சுருக்கம், பழமொழியின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று.

சாலை இளந்திரையன் பழமொழி ‘குறித்த பொருளை அழுத்தமாய் விளங்கச் செய்யும் ஆற்றல் கொண்டது என்கிறார். பழமொழி வழங்கக் கூடிய சந்தர்ப்ப சமுதாயச் சூழலையே

தொல்காப்பியர் சுட்டுகிறார். 'முதுமொழி' பழமொழியைச் சுட்டும் பெயராகவும் அமைகின்றது. மேலும் அது பலமுறை வழக்கில் பழங்காலத்திலிருந்து வழங்கி வருவது என்ற கருத்தையும் புலப்படுத்துகின்றது.

**பழமொழிகளின் தொன்மை :**

பழமொழி என்ற சொல் மிகப் பழமையானது என்பதற்குச் சங்கப்பாடல் ஒன்று சான்றாக உள்ளது.

தன் காதலன் தன்னைப் பிரிந்து சென்றுவிட அந்நிலையில் மனம் கலங்கி வாழும் தலைவியின் கூற்றாக மாமூலனார்

***'அம்ம வாழி, தோழி! இம்மை***

***நன்று செய் மருங்கில் தீதுஇல் என்னும்***

***தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று கொல்?'*** *(அகநானூறு101:1-3)*

இம்மையிலே நல்லனவே செய்யுமிடத்து அவர்க்கு என்றுமே தீது வருவதில்லை என்ற சொல்லப்படும், தொன்றுதொட்டு வழங்கி வரும் பழமொழியும் இந்நாளிலே பொய்யாகிப் போயினது போலும் என்ற துயரத்தில் வரும் பழமொழியின் மீதான நம்பிக்கை தமிழர்களிடத்தில் மிகத் தொன்மையானது என்பதையே காட்டுகிறது.

தமிழ் இலக்கியங்களைக் காலவரிசைப்படுத்தும் ஆய்வாளர்கள் முன்பழந்தமிழ் சங்க காலத்து நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் 'பழமொழி' என்ற சொல் பற்றிய குறிப்பிலும், முன்னோர் தொன்று தொட்டு வரும் பழமொழி என்பதில் மிகமிகப் பழங்காலத்திலேயே தமிழர்களிடையே 'பழமொழி'கள் வழக்கில் இருந்துள்ளன.

பழமொழிகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு பழங்கால புலவர்களால் இயற்றப்பட்டதும் ,போற்றத்தக்கதாகத் திகழ்வது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான 'பழமொழி நானூறு' என்னும் நூலாகும்.

**வட்டாரப் பழமொழிகள் :**

முதுசொல், முதுமொழி, பழமொழி, பழஞ்சொல், மூதுரை என்ற சொற்கள் பழமொழியைச் சுட்டும் இலக்கிய வழக்குகள். புழமொழியைத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெவ்வேறு வகைகளில் குறிப்பிடுகின்றனர். நெல்லை மாவட்டத்தார் பழமொழியை 'சொலவடை' என்றும், இராமநாதபுரத்தில் 'ஓவகதை' என்றும், சேலம், ஈரோடு பகுதிகளில் 'சொலவந்தரம்' என்றும், கோவை மாவட்டத்தில் 'ஒப்பத்தட்டம், ஒவகதை' என்றும் பழமொழியைப் பாவிக்கின்றனர்.

**பழமொழிகளின் இயல்பு :**

பழமொழிகள் ஒரே மூச்சில் சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும். பழமொழியின் சுருக்கமே அதன் மூலப் பண்பாகும். மக்களால் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுப் அன்றாட வாழ்க்கையில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். புழமொழிகள் மக்களால் மீண்டும் மீண்டும் சொல்லப்படும் பொழுது அப்பழமொழி – பழமைத் தன்மை பெறுகிறது.

**இயேசு காவியத்தில் பழமொழிகள் :**

இயேசு காவியத்தில் கவிஞர் கண்ணதாசன் நேரிடையாகச் சொல்லக்கூடிய வகையில் பழமொழிகளைக் கையாளுவதைத் தவிர்த்துத் காவியத்தின் தன்மை கருதி சில பழமொழிகளை மாற்று வடிவத்தில் கையாண்டுள்ளார்.

சுக்கிரியாஸ், எலிசபெத் இருவரும் கணவர் மனைவியாக இல்லற வாழ்வை இனிது நடத்தி வாழும் நற்குடிமக்கள். இவர்கள் மகப்பேறின்றி வாடிய நாட்களில் தேவதூதன் திருமுன் தோன்றி உன் மனையாளுக்கு அழகான ஆண்குழந்தை பிறக்கும். அவருக்கு 'அருளப்பன்' என்று பெயரிடுவீர் என்றுக் கூற அதனை நம்பாத சக்கிரியாஸ் நானும் மூதாட்டி அவளும் மூதாட்டி , இனி எப்படி எங்களுக்க குழந்தை பிறக்கும் என்றுக் கூறுகிறார். அதாவது 'மலடியை பிள்ளை பெறச் சொல்வது' என்ற பழமொழியை கவிஞர் தனது காவியத்தில் இடத்தின் தன்மைக் கருதி

**'ஈனும் காலம் இனி எமக்கேது'** **(இ.கா.ப.9)**

என்பதாகக் கையாண்டுள்ளார்.

**வளரும் பருவம் :**

இயேசு தனது வளரும் பருவத்தில் பெற்றோரிடமும், மற்றோரிடமும் பணிந்து நடக்கும் பண்பு உடையவர். அவரது குண இயல்பை விளக்கும் வகையில் கவிஞர்

***'கிட்டாதாயின் வெட்டெனமற'*** *(இ.கா.ப.38)*

என்றப் பழமொழியை பயன்படுத்தியுள்ளார்.

**காணாமற் போதல் :**

***'பழத்தைத் தேடிப் பறவைகள் செல்லுவது'*** *(இ.கா.ப.144)*

என்ற பழமொழியைக் கண்ணதாசன் தன்னுடைய காவியத்தில் இடம், பொருளுக்கு ஏற்ப சித்தரித்துள்ளார். இயேசு குமாரன் பன்னிரண்டாம் வயதில் பாஸ்கா திருவிழாவின் போது காணாமற்போய் பெற்றோர் தேடி கண்டு கொள்கின்றனர். அப்போது இயேசு என்னை ஏன் தேடினீர்? தந்தையின் சேவையை செய்யவே நான் இங்கு வந்தேன் என்று கூறினார்.

**அறிவுரை :**

**'வாயிறும் வயிறும் ஆசையில் விழுந்தால்**
**வாழ்க்கை பாலைவனம்'** **(இ.கா.ப.96)**

**' விதைப்பதும் இல்லை அறுப்பதும் இல்லை'** **(இ.கா.ப.107)**

என்ற பழமொழிகள் இயேசு மக்களுக்கு அறிவுரை கூறும் நிகழ்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வழக்கத்தில் உள்ள பழமொழிகள்**

***'உமது கண்ணில் உத்திரம் கிடைக்க***
***சோதரன் கண்ணில் துரும்பைப் பார்பதா?'*** *(இ.கா.ப.109)*

***'ஊரிரண்டுப்பட்ட கதை போல'*** *(இ.கா.ப.124)*

***'குட்டை எங்கோ கொக்குகள் அங்கே'*** *(இ.கா.ப.222)*

***'ஊசியின் காதில் கூட ஒட்டகம் நுழையும்'*** *(இ.கா.ப.246)*

***'வைக்கோற் போரில் படுத்த நாய்'*** *(இ.கா.ப.283)*

***'வாளெடுப்போர் வாளிலே மடிகிறார்'*** *(இ.கா.ப.337)*

இயேசு காவியத்தில் வரும் இப்பழமொழிகள் வழக்கில் பெரிய மாறுதல் இன்றி இருப்பனவாகும்.

**முடிவுரை :**

'பழமொழிகள்' வட்டார வழக்கிலும் பேச்சு வழக்கிலும் நெடுங்காலமாகவே கையாளப்பட்டுள்ளதையும் தொன்மையான ஏட்டு இலக்கியங்களில் பதிவு பெற்றுள்ளதைக் கொண்டு தமிழர்கள் தங்களின் கருத்தை வெளியிடும் போது 'நயம்' கருத இடத்திற்குத் தகுந்த பழமொழிகளைக் கையாள்கின்றனர் என்பதை அறிய முடிகிறது. இயேசு காவியத்தில் கவிஞர் கண்ணதாசன் பழமொழிகளை மிகக் குறைவாக பயன்படுத்தியுருந்தாலும் இடத்திற்கு ஏற்றவாறு கையாண்டுள்ளார்.